---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

லங்கா கவர்ன்மென்ட் இன்போர்மேசன் இன்பிராஸ்ட்ரக்சர் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் திரண்ட மிகை ரூபா 357,000 குறைத்துக் காட்டப்பட்டதன் காரணமாக, நிதிக்கூற்றுக்கள் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் பங்குமூதனமானது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனத்தில் ஏற்பட்ட சூத்திரப் பிழையின் காரணமாக ரூபா 44,821,799 ஆக சீர்செய்யப்பட வேண்டும். நிதி | சரியான தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| என்பவற்றில் அந்த பெறுமதியால் வேறுபாடொன்று காட்டப்பட்டது. | நிலைமைக் கூற்றில் உள்ள மூலதனமானது சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்’தொகைக்கான மாற்றங்கள் எதுவும் இல்லாததால் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றை சரியான புள்ளிவிவரங்களுடன் மாற்றுவதற்கு தாங்கள் அனுமதித்தால் மிகவும் நன்று. | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் ICTA தாய் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா 44,001,286 தொகை 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பெறப்பட்டிருக்கவில்லை. | ICTA இடமிருந்து அதனை பெறுவதற்கு LGII வெளிப்புற பொறுப்புக்களை கொண்டிருக்க வேண்டும். அத்தகைய பொறுப்பு ஏதும் இல்லாமல் ICTA ஆனது LGII இற்கு பணம் செலுத்த வழி இல்லை. தற்போது ரூபா 822,800 தவிர LGII மூலம் வழங்குநர்களுக்கு வேறு எந்த நிலுவைக் கொடுப்பனவுகளும் காணப்படவில்லை. எனவே ICTA இந்த பொறுப்பை LGII இற்கு செலுத்த முடியாது. மறுபுறம் ICTA ஏற்கனவே LGII ஐ ICTA உடன் இணைப்பதற்கான ஒரு குழு தீர்மானத்தை நிறைவேற்றி இந்த மீதிகளுடன் ஈடுசெய்யப்படும். (இணைப்பு முன்மொழிவு தொடர்பாக அமைச்சிற்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட சபை பத்திரம் மற்றும் கடிதத்திற்கான இணைப்பைப் பார்க்கவும்) | பெறவேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133(1) ஆம் பிரிவு | 2011 யூலை 18 இல் கம்பனி நிறுவப்பட்டதைத் தொடர்ந்து கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கவில்லை. | ICTA கணக்குகளைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக, LGII கணக்குகளும் தாமதமாகியிருந்ததுடன் ICTA மற்றும் LGIII உள்ளடங்கிய ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. LGII | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இன் ஒரே பங்குதாரர் ICTA ஆகும், மேலும் ICTA சபை இரு கம்பனிகளின் கணக்குகளுக்கும் அங்கீகாரம் அளித்துள்ளது. AGM ஐ நடாத்தாமல் இருப்பது கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது, எனினும், வருடாந்த நிதிக்கூற்றுக்களின் நிலுவைகள் தீர்க்கப்பட்டு கணக்குகள் நாளதுவரையாக்கப்பட்டு கொண்டு வரப்பட்டதுடன், சரியான நடைமுறைகள் பின்பற்றப்படும். | |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தை கம்பனி தயாரித்திருக்கவில்லை. | LGII இன் செயல்நடவடிக்கைத் திட்டம் ICTA இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், 2020 ஆம் ஆண்டில், ICTA திட்டத்தின் கீழ் LGII இன் செயற்பாடுகளை உள்ளடக்கிய செயல்நடவடிக்கைத் திட்டம், ICTA ஆல் வடிவமைக்கப்பட்ட முன்மொழியப்பட்ட டிஜிட்டல் மூலோபாய வழியில் டிஜிட்டல் சேவைகள் மூலோபாய தூண் மூலம் LGII இன் பணி நோக்கெல்லையை தற்போது எடுத்துரைத்துள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | 2003 யூன் 2 ஆம்ட திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள். | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | வழிகாட்டல் 6.5.1 | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்று 18 மாதங்கள் தாமதத்திற்குப் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அவற்றுடன் சேர்த்து வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதை ஏற்றுக்கொள்கிறோம். 2016 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக இருந்த நிலுவைத் தொகையே இதற்குக் காரணமாகும். எனினும், நாங்கள் கணக்காய்வாளர்களுக்கான 2021 கணக்குகளைத் தயாரித்து அரசாங்க திகதி அட்டவணைக்கேற்ப இருக்க திட்டமிட்டுள்ளோம். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட பின்பற்ற வேண்டும். |
| (ii) | 9.2 ஆம் வழிகாட்டல்கள் | மனித வளத் திட்டம் மனித வள பாதீட்டுடன் ஒருங்கிணைத்து தயாரிக்கப்பட வேண்டியதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் அரசாங்க திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ICTA இற்கு செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மை வழங்கப்பட்டு, நிலையான கால ஒப்பந்தங்கள் (01 வருடம்) தொடர்பாக பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வணிகத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் புதுப்பிக்கப்பட்டதால் மனித வளத் திட்டம் மற்றும் பதவியணியினர் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ICTA மற்றும் அதன் உப கம்பனிகளின் செயற்பாடுகளை மனித வளங்களை முகாமை செய்வதற்காக ICTA இற்கு (2003 மே 27 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் (இல. 3/0884/134/027) செயற்பாட்டு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>2017 ஆம் ஆண்டில், அமைச்சரவை ICTA ஐ மறுசீரமைப்பதற்கான தேவையை எடுத்துரைத்ததுடன் அதன் அடிப்படையில் அப்போதைய முகாமைத்துவம் மறுசீரமைப்பு செயன்முறையைத் தொடங்கியது, இது BoDs ஆல் அங்கீகரிக்கப்பட்டது. நிறுவன கட்டமைப்பு மறுசீரமைப்பு | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செயன்முறையின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் மீள்வரையறை செய்யப்பட்டது.<br><br>2020 நவம்பரில், புதிய நிறுவன கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளுக்காக அமைச்சரவைக்கு வழங்கப்பட்ட புதிய அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. | |
| (iii) | 9.3.1 ஆம் வழிகாட்டல் | ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான திட்டத்தை கம்பனி தயாரித்திருக்கவில்லை. | 2019 இல் உருவாக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் 2020 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது (இது ஏற்கனவே 2020 நிதிக்கூற்று கணக்காய்வின் போது கணக்காய்வாளர்களுடன் பகிரப்பட்டது). | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 1,480,734 பந்நாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,316,964 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,836,230 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மானியப் பெறுவனவு ரூபா 5,710,114 ஆல் குறைவடைந்தமையே இவ் வீழ்ச்சிக்கான காரணமாகும்.